REGD. NO. M. 6911 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 19உ சனி (3—8—57) ★ ★ வெளியீடு: ஆடி 20உ ஞாயிறு (4—8—57) [இதழ் 42

தனிமனிதரைக் கொண்ட கிராமம்!

ப்ரோச், ஆக. 2—

ப்ரோச் மாவட்டத்தைச் சேர்ந்த தம்வாதா என்ற கிராமத்தில் ஒரே ஒரு வீடுதான் இருக்கிறதாம்! அதில் ஒரே ஒரு மனிதர்தான் வசிக்கிருராம்!

இந்தக் கிராமம், நான்டெட் தாலுகாவைச் சேர்ந்தது என்றும், இது 10 ஏகர் பரப்புடையது என்றும், இதில் அமீர் ஷா என்ற ஒருவர் மட்டுமே வாழுகிறுர் என்றும் ரெவினியூ அதிகாரிகள் கூறுகின்றனராம்!

'அநீதிக்கு வெடிவைப்போம் - ஆளவந்தார்க்கு உணர்த்துவோம்'

'தபால் ஊழியர் போராட்டத்திற்கு மக்களின் ஆதரவு நிரம்ப உண்டு'

சர்வ கட்சிக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், அன்பழகன் போர் முரசம்

சென்னை, ஆக. 3—

"முப்பது ரூபாய் சம்பளக்காரர்களுக்குச் சம்பள உயர்வு என்ருல் எட்டணு உயர்த்தப்படுகிறது; இந்த எட்டணு உயர்வுக்கு அந்தத் தொழிலாளி படாத பாடுபட்டுப் போராட வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் ரூ. 1,000, 2,000 எனச் சம்பளம் வாங்கும் பெரிய அதிகாரிகளுக்கு ரூ. 100, 200 எனச் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டுத்தான் வருகிறது. ரூ. 100 சம்பளக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் பஞ்சப்படியை உயர்த்தி 150 ரூபாயாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டால், அப்படிக் கேட்பவர்களை இந்த நாட்டு அரசாங்கம் தேசத்துரோகிகள் எனக் கூறுகிறது"

—என்று, நேற்று மாலை சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் தபால்-தந்தி ஊழியர் கோரிக்கைகளை ஆதரித்து நடந்த மாபெரும் சர்வகட்சிக் கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இன்றைக்கு தபால்—தந்தி ஊழியர்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகிறது; ஆனல் அவர்களின் போராட்டத்திற்குப் பொது மக்களின் பேராதரவு இருந்துவருகிறது என்பதை இந்த மாபெரும் கூட்டமே எடுத்துக் காட்டுகிறது.

"பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவைத் திரட்டி, ஆளுங்கட்சியின் அநீதியைக் கண்டிக்க நாம் இங்கு கூடியுள்ளோம்.

"இன்று இந்த மேடையிலே எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் கூடியுள்ளனர்; உண்மையில் ஒரு பிரச்சினை குறித்து எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றுசேர்ந்து பேசுவது என்பது அரிது; அப்படிப் பேசினலும்; அந்தப் பேச்சிலே ஒவ்வொருவரும் 'பொடி' வைத்துத்தான் பேசுவார்கள்.

"ஆனல் இன்றையக் கூட்டம், ஆளும் கட்சியான காங்கிரசுக் கட்சியின் அநீதிக்கு வெடி வைப்பதுபோல் அமைந்து விட்டது.

"காங்கிரசுக் கட்சிக்கு வெடி வைப்பதென்று நான் கூறுவது, இன்றைய காங்கிரசைத்தான்; அன்றைய உண்மைத் தியாகிகள் மலிந்திருந்த காங்கிரசையல்ல — காந்தியார் வளர்த்த காங்கிரசையல்ல—ஜனநாயகம் நிறைந்த காங்கிரசையல்ல—ம.பொ.சி.-யும் ஜீவானந்தமும் இருந்து பாடுபட்ட நேர்மையான காங்கிரசையல்ல! பண்பை இழந்து, நீதி-நேர்மையை இழந்து நிலைகுலைந்திருக்கும் இன்றைய காங்கிரசைத்தான் நான் கூறினேன்!

"அரை ஆடை உடுத்திய மகான் காந்தியைத் 'தேசப்பிதா' எனப் போற்றுகிருர்கள் காங்கிரஸ்காரர்கள்; அவர் வழி வந்ததாகக் கூறிக்கொள்கின்றனர்; ஆனல் இன்றையக் காங்கிரஸ் ஆட்சியில் நடப்பதென்ன?

"அரை ஆடையும், கால் ஆடையும் உடுத்தும் ஏழை மக்களின் இன்னலைப்போக்க மறுக்கின்றனர், இன்றையக் காங்கிரஸ்காரர்கள்!

"ஆண்டியின் உடைபோல உடுத்தி அமைதியான சாதுக்கள்போல் உள்ளவர்கள் நிறைந்த இலாகா தபால்-தந்தி இலாகா! அந்த இலாகா ஊழியர்கள் துப்பாக்கியைத் தொட்டதில்லை! கற்களையோ வேறு ஆயுதங்களையோ தீண்டியது கிடையாது! மென்மையான கடுதாசியைத் தவிர, அவர்கள் எந்த பலாத்கார ஆயுதங்களையும் தாங்குவது கிடையாது! சுயராஜ்ய சர்க்காரில் அப்படிப்பட்ட சாதுக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மறுக்கப்படுகிறது! இதைவிட வெட்கங்கெட்ட சர்க்கார் வேறு ஒன்று இருக்க முடியுமா?

"வீட்டிலே வளர்க்கும் சாதுவான பிராணி பசு; அந்தப் பசுவுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாகக்கூறி அடிப்பதைப் போல, இந்த சாதுக்களைப் பார்த்து, 'தேசத்துரோகிகள்' என்கிறது, சர்க்கார்!

"தபால்-தந்தி ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை பலமுறை எடுத்துச் சொல்லிவிட்டனர்; வேண்டுகோள் விடுத்துப்பார்த்து விட்டனர். கடைசி வரை போராடிப் பார்த்துவிட்டனர். எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை சர்க்கார்! எனவேதான், இப்பொழுது ஆகஸ்டு 9-ந் தேதி இறுதிப் போராட்டமான வேலை நிறுத்தத்தை நடத்த இருக்கின்றனர்; அவர்களது போராட்டம் வெற்றியடைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமாறு கோருகிறேன்."

சென்னை, ஆக். 2—

பொது விற்பனை வரி 1·9/16 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறதல்லவா? 1—8—57-லிருந்து இது அமுலுக்கு வந்துள்ளது.

★

இரா. நெடுஞ்செழியன்

பொதுச்செயலாளர் அவர்கள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கொட்டுகிற மழையிலே கூடிநின்று நீங்கள், எங்கள் பேச்சைக் கேட்கின்றீர்கள்; தபால்-தந்தி ஊழியர்களின் கோரிக்கைகளை நீங்கள் அத்தனைபேரும் ஆதரிக்கிறீர்கள் என்பதற்கு இதுவே சான்று!

"அவர்கள் கோரிக்கைகளை நாம் எல்லோரும் உணர்ந்து விட்டோம், மழையும் உணர்ந்திருக்கிறது; ஆனல், இந்த நாட்டின் ஆளவந்தார்கள் மட்டும் உணர மறுக்கிருர்கள். அவர்களுக்கு உணர்த்தத்தான் ஆகஸ்டு 9-ந் தேதியன்று போராட்டம் நடைபெறப்போகிறது. அந்தப் போராட்டம் வெற்றிபெற நாம் அனைவரும் ஆதரவு நல்க வேண்டும்; 'போராட்டம் வெல்க, வெல்க' என, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துகிறேன்."

வேலைநிறுத்தத்தை முறியடிக்க இராணுவமாம்!

'மாற்று ஏற்பாடு' என்கிருர் நேரு!

புதுடில்லி, ஆக. 2—

"தபால்-தந்தி ஊழியர்களும், இதர மத்திய சர்க்கார் இலாகா ஊழியர்களும், வரும் ஆகஸ்டு 8-ந் தேதி நள்ளிரவிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால், அந்த வேலை நிறுத்தத்தை முறியடிக்க, சர்க்கார் இராணுவத்தின் துணையை நாடும்"

என்று பண்டிதர், தனது காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்திருக்கிருராம்.

"வேலை நிறுத்தத்தை அடக்க அல்ல; மாருக, சாதாரணமாகச் செய்திப் போக்குவரத்தினை நடத்தவும், இதர அவசியமான வேலைகளைக் கவனிக்கவுமே, இராணுவத்தை உபயோகிப்போம்"

என்று அவர் தமது உத்தேசத்திற்கு விளக்கம் தந்தாராம்!

வேலை நிறுத்தத்தில் ஊழியர்கள் ஈடுபட்டால், இந்த இலாகாக்கள் எல்லாம் அத்தியாவசியமானவை என்றும், வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்றும் ஒரு மசோதா மூலம் பிரகடனப்படுத்துவார்களாம்!

மேலும் சர்க்கார், ஆங்காங்குள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்களிலிருந்து, புதிதாக பேர்களைப் பொறுக்கி, தபால் அலுவலக வேலைகளைக் கவனிக்க ஏற்பாடு செய்வார்களாம்!

இதற்கிடையில், இரண்டாவது சம்பளக் கமிஷன் நியமிப்பது பற்றியும், அதன் அதிகாரங்கள் குறித்தும் திங்களுக்குள் அறிவிப்பு வரும் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், மத்திய சர்க்கார் ஊழியர் பிரதிநிதிகள், தங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டாலன்றி வேலை நிறுத்தம் நடந்தே தீரும் என்று அறிவித்துள்ளனர்.

போர்க்களம் புகும் வீரர்கள்

நகரில் மாபெரும் தபால் ஊழியர்களின் ஊர்வலம்

சென்னை, ஆக. 3—

அனைத்திந்திய தபால்-தந்தி ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக நேற்று மாலை சென்னையில் மாபெரும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டன.

அரை மைல் நீளமிருந்த அந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மத்திய சர்க்கார் ஊழியர்கள் கலந்துகொண்டனர். பல்வேறு சர்க்கார் ஊழியர் சங்கங்கள் ஊர்வலத்தில் பங்கு கொண்டன.

அரசாங்க ஊழியர்களால் இதுவரை இப்படிப்பட்டதோர் ஊர்வலம் இதுவரை நடந்ததில்லை என்று சொல்லும் அளவுக்கு அமைந்திருந்தது ஊர்வலம்; தபால்-தந்தி ஊழியர்களின் பல்வேறு கிளைச் சங்கங்கள் வருமான வரி இலாகா ஊழியர் சங்கம், கணக்குத் தணிக்கை ஊழியர் சங்கம், மருத்துவப் பண்டகசாலை ஊழியர்கள், தொழிலாளர் சங்கங்கள், சிவில் விமானப் போக்குவரத்து ஊழியர் சங்கம், அக்கவுண்டெண்ட்-ஜெனரல் (ஆந்திரா) தபால்-தந்தி காரியாலய ஊழியர் சங்கம், சுங்கஇலாகா ஊழியர் சங்கம் முதலியவை ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொண்டன.

ஊர்வலத்தினர் ஒலித்துக் கொண்டு சென்ற ஒலிமுழக்கங்கள், செவிடுபட்டிருக்கும் சர்க்காரின் செவிகளைத் துளைக்கும்படியாக அமைந்திருந்தன; ஊர்வலத்தை வரவேற்று பொதுமக்களும் ஆரவாரம் செய்தனர். ஊர்வலம் மவுண்ட்ரோடைக் கடக்க சுமார் 20 நிமிஷநேரம் பிடித்தது.

மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வந்திருந்தனர். எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், தொழிற்சங்கங்களின் தலைவர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

தோழர் டி. எஸ். இராமாநுஜம் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ஆட்சியாளரின் போக்கை வன்மையாகக் கண்டித்தார்.

தபால்-தந்தி ஊழியர்களின் நெடுநாளைய கோரிக்கைகளை விளக்கியும், இரண்டாவது மத்திய சம்பளக் கமிஷன் அமைக்க வேண்டிய அவசியத்தைக் குறித்தும், ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் வேண்டுமென்றும் விளக்கி தோழர் கே. இராமமூர்த்தி பேசினர்.

தோழர்கள் க. அன்பழகன் எம். எல். ஏ; தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், சட்டநாத கரையாளர், எஸ். விஜயலட்சமி, ஆர். இராமநாதன், நாராயணன், கல்யாணசுந்தரம், கிருஷ்ணமூர்த்தி, ம. பொ. சி., ப. ஜீவானந்தம், ஆகியோர் தபால்—தந்தி ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை எடுத்துக் கூறி, ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்து, ஆகஸ்டு 9-ந் தேதி நடக்கவிருக்கும் தபால் தந்தி ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவளித்துப் பேசினர்.

தோழர் க. அன்பழகன் அவர்கள் பேச எழுந்ததுமே நல்ல மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. கொட்டுகிற மழையையும் பொருட்படுத்தாமல் கூட்டம் நடந்த வண்ணமிருந்தது. மக்கள் அசையாமல் அப்படியே நின்றது குறிப்பிடத்தக்கது.

இறுதியாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கடும் மழையின் காரணமாக தம் உரையை இரண்டொரு வாக்கியங்களோடு முடித்துக்கொண்டு தபால்—தந்தி ஊழியர்களின் போராட்டம் வெற்றிபெற வேண்டுமென தி. மு. க. சார்பில் வாழ்த்து தெரிவித்தார்கள்.

படாஸ்கர் அறிக்கை

புதுடில்லி, ஆக 2—

ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறு பற்றிய படாஸ்கரின் அறிக்கை பற்றி மக்கள் சபையில் ஒரு கேள்வி எழுந்தது.

ஆந்திர காங்கிரஸ் உறுப்பினர் விசுவநாத ரெட்டி என்பார், 'சென்னை பத்திரிகைகளில் படாஸ்கர் அறிக்கை பற்றி ஹேஷ்யங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன; அதுபற்றி நான் தந்திருந்த நோட்டீஸ் என்னவாயிற்று?' என்று கேட்டார்.

'அதனை நான் உள்நாட்டு மந்திரிக்கு அனுப்பிவிட்டேன்' என்று சபைத் தலைவர் கூறினர்; உள்நாட்டு மந்திரியோ—'எனக்கு வந்து சேரவில்லை' என்றார்; சபைத் தலைவர், 'அதை உடனே தேடிப் பார்க்கிறேன்—அனுப்பி வைக்கிறேன்' என்றார்!

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 3—8—57 சனி

புதுடில்லி வெறிச் செயல்!

இந்தியப் பேரரசின் தலைநகரம் புதுடெல்லி. அங்கு குடியரசுத் தலைவர் முடிசூடாமன்னராக இருந்து கோலோச்சுகின்றார்.

இத்துணைக்கண்டத்தில் வாழும் முப்பத்தாறுகோடிமக்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் போராற்றல் மிகுந்த மக்கள் சபையின் செயலகம் அங்குதான் அமைந்திருக்கின்றது. இன்று அச்சபை மிகமிகத் துடிப்புடன் பணிபுரிந்தும் வருகிறது.

உலக வல்லரசுகளின் தூதுவர்கள் பலரும் அங்குதான் முகாமிட்டுள்ளனர். உலக சிற்றரசுகளின் தூதுவர்களும் அதே நகரில்தான் தம் தம் தலைமை அலுவலகத்தைத் திறந்துவைத்துக்கொண்டுள்ளனர்.

இந்தியத் துணைக்கண்டத்தின் வடப் பகுதிகளிலிருந்து மட்டுமல்லாது, உலக நாடுகளிலிருந்தும் தினம் தினம் பல விருந்தினர்கள் வருவதும் போவதுமாக உள்ளனர். அவர்களில் புகழ் பெற்றவர்களும் உண்டு; இனி அறிந்துக்கொள்ளப்படவேண்டிய நல்லவர்களும் உண்டு.

அப் புதுடெல்லியில்தான் புகழ்மணம் பரப்பி வாழ்ந்து வரும் பிரதமர் ஆட்சி செய்து வருகிறார். அவருக்குக் கட்டியங்கூறி காலங் கழித்துவரும் கூட்டு அமைச்சர்கள் பலரும் அப் புதுடெல்லியில்தான் கொலுவீற்றிருக்கின்றனர்.

இதுதான் இன்றைய புதுடெல்லி. இப் புதுடெல்லியைத்தான் ஆக்கித் தந்தது அன்றொரு நாள் ஆங்கில ஏகாதிபத்தியம்.

மேற்குறிப்பிட்டுள்ள அளவுடன் நிறுத்தினால் புதுடெல்லி நகரின் சிறப்பு முற்றுப்பெற்றதாகாது. அங்குதான் தேசப்பிதா என்று பெருமையாக அழைக்கப்பட்டுவரும் காந்தியடிகளாரின் புனிதமான கல்லறையும் அமைந்திருக்கின்றது.

காந்தியடிகளாரின் கல்லறை மட்டுமே அங்கு இருக்கவில்லை. அவர் உயிரோடு உலாவிய நாட்களில், அந்த நகரில் எங்கு தங்கி, தமது உயர் இலட்சியத்தை உலகத்திற்கு உணர்த்தி வந்தாரோ, அப்பெருமைமிகுந்த 'பங்கி காலனி'யும் அதே நகரில்தான் இருக்கின்றது.

தம் வாழ்நாட்களில் எவருடன் இருந்து அளாவளாவி அன்புரை புகன்று காந்தியடிகளார் வாழ்ந்து வந்தாரோ, அதே அரிசன மக்கள்தான் அந்த 'பங்கி காலனி'யில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆங்கில ஏகாதிபத்தியம் ஆக்கித் தந்த புதுடெல்லி நகரில் மாட மாளிகைகள் உண்டு; அரண்மனைகள் உண்டு. காந்தியடிகளாரை தம்மிடம் வரவழைத்துக்கொள்ளும் வனப்பு, அவை எதற்கும் இருக்கவில்லை. 'பங்கி காலனி'யின் எளிமைதான் அவரைக் கவர்ந்தது.

பங்கி காலனியில் காந்தியடிகளார் தங்கியிருந்த நாட்களில், குடியரசுத் தலைவர் போன்றவர்கள் அங்கு தங்கி உள்ளனர். பிரதமர் நேருவும் அங்கு தங்கி மகிழ்ந்தவர்தான்.

காந்தியார் விரும்பி தங்கிய அதே பங்கி காலனி, காங்கிரசுத் தலைவர்கள் பலருக்கும் உறையுள்ளாக ஒரு காலத்தில் இருந்துவந்த அதே இடம், இன்றைய தினம் காங்கிரசு ஆட்சியாளர்களுடைய அடக்குமுறையை உலகுக்கு விளக்கிக் காட்டும் காட்சிக்கூடமாக மாறி நிற்கிறது.

கொல்லாமை, இன்னா செய்யாமை, பொய் மொழியாமை போன்ற உயர்ந்த நெறிபற்றி எல்லாம் எந்த மேடைமீது அமர்ந்து காந்தியடிகளார் தெளிவுரையாற்றி வந்தாரோ, அதே புனிதமான மேடைமீது, காங்கிரசு ஆட்சியாளர்களின் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட நாசம் கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கின்றது.

காந்தியார் எந்த பீடத்திலிருந்துகொண்டு 'ஆண்டவன் அருள் வேட்டலில்' ஈடுபட்டிருந்தாரோ, அதேபீடத்தைத் தங்களுடைய துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்திருக்கின்றனர் காங்கிரசு ஆளவந்தார்கள்.

பீடத்தையா துப்பாக்கிக் குண்டுகளால் காங்கிரசு ஆளவந்தார்கள் துளைத்து இருக்கின்றனர்? இல்லை—நிச்சயமாக இல்லை.

காந்தீய உயர் நெறியை—அவர் உயிர் இலட்சியங்களான கொல்லாமையை — இன்னா செய்யாமையை—பொய் மொழியாமையை, துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தி இருக்கின்றனர், இன்றைய காங்கிரசிலுள்ள அவருடைய சீடகோடிகள்!

★

சம்பள உயர்வு
விலகல் வேகுமதி
மருத்துவ வசதி
இலவசக் குடியிருப்பு
பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்துடன் கூட்டல்.

இவ்வைந்து கோரிக்கைகளுக்காக, 'பங்கி காலனி'யில் வாழ்ந்துவந்த நகர சுத்தித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வேலைநிறுத்தம் துவங்கி இரண்டே நாட்கள்தான் ஆகின்றன.

நகரத்தை சுத்தமாக வைத்தல் என்ற புகலின்கீழ் மேற்படி வேலைநிறுத்தத்தை முறியடிக்க, நகரசுத்தித் தொழிலாளர்களைப் பணியவைக்க, கருங்காலிகளைப் பயன்படுத்த முனைந்தது நகராட்சி நிறுவனம்.

அக்கருங்காலிகளை பணிசெய்யவிடாமல் தடுத்தனர், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த நகரசுத்தி தொழிலாளர்கள் என்றும், போலீஸ் படையினர் மீது கற்களை வீசினர் என்றும் கூறிக்கொண்டு, நகரசுத்தி தொழிலாளரை சுட்டுத்தள்ள முனைந்தது போலீஸ் படை.

ஒருவர் இறந்தார்; முப்பது நபர்கள் காயமுற்றுள்ளனர்.

ஓடி ஒளிந்த தொழிலாளர்களைத் தொடர்ந்து துரத்திச் சென்று, கண்ணை மூடிக் கொண்டு சுட்டிருக்கின்றது போலீஸ்!

குடிசைக்குள்ளும் சுட்டிருக்கின்றது போலீஸ்!

பிரதமர் நேரு சென்றார் இக்கொடுமையைக் காண.

தங்கள் குடிசைச் சுவர்களில் துப்பாக்கிக் குண்டுகளால் உண்டாக்கப்பட்டிருந்த பன்னிரண்டு அடையாளங்களை பிரதமர் நேருவிடம் காட்டினர் தொழிலாளர்கள்!

அங்கிருந்த குருதி தோய்ந்திருந்த தரையையும் காட்டக் கண்டார் பிரதமர் நேரு!

முப்பத்தாறு கோடி மக்களின் வாழ்வை வளமாக்குவதற்காக என, காந்தியடிகளார் ஆங்கில ஏகாதிபத்தியத்திடம் அறப்போர் பல தொடுத்தார். இறுதியில் வெற்றியும் பெற்றார்.

ஆனால் இன்றையக் காங்கிரசு ஆட்சியோ, தங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டுக்கொள்வதற்காக என சிறிய சலுகைகளைக் கேட்க இரண்டே ஆயிரம் மக்கள் முன்வருவதையும் நிறைவேற்ற விரும்பாததாக இருக்கின்றது. அவ்வாறு கேட்பவர்களை துப்பாக்கிக் கொண்டு தாக்கவும் துணிகின்றது காங்கிரசு ஆட்சி!

ரூ. 78,50,00,000 செலவில்!

துறைமுகங்கள் அபிவிருத்திக்குத் திட்டமிடப்படுகிறது.

இந்தியாவிலுள்ள துறைமுகங்கள் அபிவிருத்திக்காக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் ரூ. 33 கோடி ஒதுக்கப்பட்டது; பிறகு அது ரூ. 49,40,00,000 ஆக அதிகரிக்கப்பட்டது; எனினும், அபிவிருத்தித் திட்ட நிறைவேற்ற வேலைகள் தாமதித்து ஆரம்பிக்கப்பட்டதால் திட்ட காலத்தில் சுமார் ரூ 27 கோடிதான் செலவழிக்கப்பட்டது.

சுமார் ரூ. $43\frac{1}{2}$ கோடி செலவாகக் கூடிய புதிய திட்டங்களை மேற்கொள்வதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முதலாவது திட்ட காலத்தில் பூர்த்தியடையாத திட்டங்கள் உட்பட, பெரிய துறைமுகங்களின் அபிவிருத்திக்கு மொத்தம் ரூ. $78\frac{1}{2}$ கோடி செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்ப்பாசன வேலைகள்

6,936 ஏக்கர் நிலம் அதிக அளவில் சாகுபடியாகும்

சென்னை, ஆக. 2—

மாநில சிறிய நீர்ப்பாசன வேலை அவசர நடவடிக்கையின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 170 சிறிய நீர்ப்பாசன வேலைகள் 1957—58-ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். இதற்கு ஆகும் செலவு மதிப்பு ரூ. 8 இலட்சம்; குளங்கள் மராமத்து வேலைகளும் இதில் சேர்ந்துள்ளன.

இதன் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில 6,936 ஏக்கர் நிலம் அதிகப்படியாக சாகுபடிக்குக் கொண்டு வரப்படும்; அதிக உணவு உற்பத்தி மதிப்பு 3,636 டன்.

புதிய காசால் விளைந்த சிக்கல்கள்

'இலாபத்தைத்தான் அரசாங்கம் முக்கியமாகக் கருதுகிறது'

'மக்களுடைய தொல்லையை முக்கியமென எண்ணவில்லை'

தோழர் க. அன்பழகன் தெளிவுரை

சென்னை சட்டசபையில், விற்பனை வரிச் சட்டதிருத்த மசோதா மீது தோழர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"இந்தத் திருத்த மசோதா நிறைவேறினால் இம்மாநில சர்க்காருக்கு விற்பனை வரியின் மூலம் இன்னும் கொஞ்சம் வருவாய் கிடைக்கும் என்ற காரணத்தால், இந்த மசோதாவுக்கு நான் மறுப்பு கூறுவதாக யாரும் கருத வேண்டாம். அரசாங்கத்தாரின் வருமானம் பெருகக்கூடிய துறைகளில் குறுக்கிடுவது அல்ல எதிர்க்கட்சியினராகிய எங்கள் நோக்கம். அதன் வருமானத்தைப் பெருக்கக்கூடிய வழி துறைகள் அரசாங்கத்தால் கண்டுபிடிக்கப்படும்போதும், சில நிலைமைகளினால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கக்கூடிய முறைகள் அரசாங்கத்தால் கண்டுபிடிக்கப்படும்போதும், அந்த வழிதுறைகள் பொதுமக்கள் மனதில் சந்தேகத்தையும், அருவருப்பையும், வெறுப்புணர்ச்சியையும் உண்டு பண்ணுபவையாக இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட வெறுப்புணர்ச்சி இந்த மசோதா சட்டமாவதால் ஏற்பட்டால், அன்றாடம் மக்கள் ஒவ்வொரு பொருளை வாங்கும்போதும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்து அவர்கள் மனதிலே அமையும். உண்மையிலேயே இப்போது வந்துள்ள 'புதிய காசானது'—அரசாங்கத்தார் வழங்குகிறபடி 'நயா பைசா'வானது மக்களுக்குப் புதிய சிக்கல்களையும், தொந்தரவுகளையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் உணருவோம். இந்தப் புதிய காசால் விளைந்த புதிய சிக்கல்கள் காரணமாக இப்போதைய விற்பனை வரி விகிதமாகிய 1-9/16 என்ற சதவிகிதத்தில் உள்ள 9/16 என்ற பின்னத்தை 16/16 என்று திருத்தி, முழு எண்ணாக மாற்றிக்கொள்ளலாம் — பின்னத்தை முழு உருவமாக ஆக்கிக் கொள்ளலாம். 'விற்பனை வரியை 2 சதவிகிதமாக ஆக்கிக்கொள்ளலாம்' என்று, அரசாங்கம் இந்தத் திருத்த மசோதாவில் குறிப்பிட்டுள்ளது. 9/16 என்ற பின்னம் கணக்குகளுக்குக் கடினமாக இருக்குமேயானால், அதையொட்டிய $\frac{1}{2}$ என்ற பின்னத்தை எடுத்துக்கொள்வது சரியான முறையே தவிர, முழு எண்ணாக மாற்றி அதிகமான விற்பனை வரியை விதிப்பது சரியான முறையல்ல. இப்போதைய விற்பனை வரி விகிதத்தில் உள்ள 9/16 என்ற பின்னத்தை $\frac{1}{2}$ என்ற பின்னமாக மாற்றாமல் ஒரு முழு எண்ணாக அரசாங்கம் மாற்றி இருப்பதிலிருந்து இந்த அரசாங்கம் இதிலும் தனது இலாபத்தைத்தான் முக்கியமாகக் கருதுகிறதே தவிர, மக்களுடைய சிக்கலைத் தீர்ப்பதை முக்கியமாகக் கருதவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

"9/16 என்ற பின்னத்தை $\frac{1}{2}$ பின்னமாக மாற்ற வேண்டுமென்றால், அரை நயா பைசாவிற்கு எங்கேபோவது என்று அரசாங்கத்தார் கேட்கலாம். உணவுப் பொருள்களின் விலைகளையும், மக்களின் தேவையான மற்ற இன்றியமையாத பொருள்களின் விலைகளையும் கவனிக்கும்போது, விலை உயர வழி வகுப்பதைவிட $\frac{1}{2}$ நயா பைசாக்களைத் தயாரித்து வழங்கும்படி இந்த அரசாங்கத்தார் மத்திய அரசாங்கத்தாரைக் கேட்டிருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகவே $\frac{1}{2}$ 'நயா பைசா' இன்மையால் ஏற்படும் சிக்கலைவிட முழு 'நயா பைசா' ஆக்குவதால் வரும் சிக்கல் அதிகமானது என்பது என் கருத்து.

"மற்றொரு வகையில் நிதரிசனமான உண்மை—கண்கூடாகக் காணப்படுவது இது—அதிகமான விற்பனை வரி விதித்தால் சில்லறை வியாபாரிகளால் பொருள்கள் விற்கப்படும்போது அவைகளின் விலை உயர்த்தப்படுகிறதே தவிர, அந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு விற்பனை வரியின் மூலம் வரவேண்டிய வருமானம் உயரவில்லை. சாதாரண சில்லறை வியாபாரிகள் 4, 8, 12 அணா விற்கோ—அல்லது புதிய பைசா முறையில் 25, 50, 75 'நயா பைசா'விற்கோ சாமான்களை விற்கின்ற ஒவ்வொரு நேரத்திலும் அவைகளின் விலை உயருகிறதே ஒழிய, அரசாங்கத்தின் விற்பனை வரி வருமானம் உயர்வதில்லை. இந்த வரியால் பொருள்களின் விலை உயரும் அளவிற்கு சரிசமமான விகிதத்தில் அரசாங்கத்திற்கு விற்பனை வரி மூலம் வரும் வருவாய் உயர்வதில்லை. சில்லறை வியாபாரிகளுக்குக் கிடைக்கும் இலாபத்திற்கு ஏற்ப அரசாங்கத்திற்கு விற்பனை வரி மூலம் வருவாய் வருவதில்லை. பெரிய வியாபாரிகள் விற்பனை வரிக் கணக்குகள் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யலாம். ஆனால் ரூ. 5,000 அல்லது ரூ. 10,000 அளவிற்கு வியாபாரம் செய்யும் வியாபாரிகள்கூட சில்லறை வியாபாரிகள் தரத்தில் சேர்ந்திருப்பதால், அவர்களுக்குப் பொருள்களின் விலை உயர்வால் வரும் இலாபத்திற்கு ஏற்ப, அரசாங்கத்தின் விற்பனை வரியின் மூலம் வருவாய் உயர்வதில்லை. அந்த வியாபாரிகள் இன்று விற்பனை வரியைக் கைவிடாமல் இலாபம்தேடி வருகிறார்கள். இந்நிலையில், விற்பனை விகிதத்திலிருந்து 9/16 என்ற பின்னத்தை முழு எண்ணாக மாற்றுவது நல்ல மாற்றம் இல்லை. ஆகவே, இந்தத் திருத்தம் அரசாஙகத்திற்கும்—வியாபாரிகளுக்கும் இடையே விற்பனை வரி சம்பந்தமாக உள்ள கணக்கு முறையை மாற்றியமைக்கிறதே தவிர—சாமான்கள் நிலையை வியாபாரிகள் மேலும் உயர்த்துவதற்கு ஒரு கருவியாக இருக்கிறதே தவிர—வியாபாரிகள், வரி உயர்வு விகிதத்திற்கு மேல் விற்பனை வரி காரணமாக விலையை உயர்த்தக் கூடாது என்று கட்டுப்பாடு விதிப்பதாக இல்லை.

"உண்மையிலேயே இந்தத் திருத்தம் நிறைவேறினால் இதனால் மக்களுக்கு ஏற்படும் தொந்தரவுகளினால், மக்களிடையே அரசாங்கத்தைப் பற்றிய எண்ணத்தில்தான் மாறுதல் ஏற்படுமே ஒழிய, அரசாங்கத்தின் வரவுக் கணக்கில் பெரிய இலாபம் ஏற்பட்டுவிடாது. ஆகவே, மக்களுக்கும் பல தொந்தரவுகள் ஏற்படக் கூடியவாறும், மக்களுடைய மனப்பான்மை மாறக் கூடியவாறும் அரசாங்கம் விற்பனை வரி சம்பந்தப்பட்டமட்டில் $1\frac{1}{2}$ நயாபைசா விலையை 2 நயாபைசாவாக உயர்த்துகின்றது. இதைக் குறிப்பிடும்போது, சில நடைமுறை நிகழ்ச்சிக்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

இராமனுதபுரம் மாவட்டத்தில் பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

இ. ல. ம. சவுந்திரபாண்டியன், தென்னரசு, இராம. வெள்ளையன் கலந்து கொண்டனர்

14—7—57 பிற்பகலில் பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் காரைக்குடி வந்து சேர்ந்தார். அவருடன், இராமனுதபுரம் மாவட்ட தி. மு. க. செயலாளர் இ. ல. ம. சவுந்திரபாண்டியன், தேவகோட்டை இராம. வெள்ளையன் இருவரும் வந்தனர்.

அன்று மாலை 6-மணிக்கு காரைக்குடி காந்தி சதுக்கத்தில் தோழர் அரூர் வீரப்பன் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தேர்தலுக்குப் பிறகு தி.மு. க. வளர்ச்சி பற்றி பொதுச்செயலாளர் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

தேவகோட்டை:

இரவு 9-மணிக்கு தேவக்கோட்டை நகர தி. மு. க. சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தொண்டி தோழர் நசுல் தலைமை தாங்கினர். பொதுச்செயலாளர் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

தொண்டி:

15—7—57 பிற்பகல் தேவகோட்டையைவிட்டுப் புறப்பட்ட பொதுச்செயலாளர் மாலை 6-மணிக்கு தொண்டி சேர்ந்தார்; அங்கு மாலை 6-30 மணிக்கு தோழர் இராம. வெள்ளையன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; பொதுச்செயலாளர் அவர்கள், 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்பது குறித்து அழகியதோர் உரை நிகழ்த்தினர்.

ஆர். எஸ். மங்கலம்:

இரவு 8-30 மணிக்கு பொதுச்செயலாளர் அவர்கள், இராசசிங்கமங்கலம் சேர்ந்தார். பொது மக்கள் திரளாகக் கூடியிருந்து பொதுச்செயலாளரை வரவேற்றார்கள். இரவு 8-30 மணிக்கு தோழர் வீரப்பன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நாட்டுப் பிரிவினைபற்றி விரிவுரையாற்றினர்.

இராமனுதபுரம்:

அன்று இரவு 11-மணிக்கு பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் இராமனுதபுரம் வந்து சேர்ந்தார். நகரமே திரண்டிருந்து பொதுச்செயலாளரை வரவேற்ற காட்சி பெருமைக்குரியது. மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முகவை நகரம் கண்ணுக்கு இனியதாய் அமைந்திருந்தது. ஆர்வமும் எழுச்சியும் பெற்ற பொதுமக்கள் பொதுச்செயலாளரை இன்முகத்தோடு வரவேற்று மலர்மாலைகள் அணிவித்துப் பூரித்தனர்.

பரமக்குடி தோழர் நாகலிங்கம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். தோழர்கள் நித்தியானந்தம், மு. பாண்டியன் ஆகியோர் பேசியபின் பொதுச்செயலாளர் அவர்கள சிறப்பானதோர் அறிவுரையாற்றினர்.

புதுவலசை:

16—7—57 பிற்பகல்1மணிக்கு பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன், இ. ல. ம. சவுந்திரபாண்டியன், எஸ். எஸ். தென்னரசு மு. பாண்டியன், முகவை-தங்கப்பா, சண்முகநாதன் ஆகியோர் புதுவலசை சேர்ந்தனர். புதுவலசை கிராமம் முழுதும் ஒன்று சேர்ந்து பொதுச்செயலாளரை வரவேற்றது; புதுவலசை இஸ்லாமியப் பெருமக்கள் தாரை தப்பட்டை முழக்க பொதுச்செயலாளரை ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். மாலை 6-மணிக்கு பொதுக்கூட்டம் தொடங்கியது. தோழர் ஷேக்தாவூத் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் திராவிடநாட்டுப் பிரிவினையை வலியுறுத்திப் பேசினர். பொதுச்செயலாளர் அவர்கள் 'ஏக இந்தியா'வின் போலித்தன்மையை ஆதாரத்துடன் விளக்கிப் பேசினர். கூட்டம் இரவு 8 மணிக்கு இனிது முடிந்தது.

பொதுச்செயலாளர் அவர்களின் மோட்டார் பழுதுபட்டுவிடவே அவர், புதுவலசையிலிருந்துகால்நடையாகவேவாலாந்துறை (5 மைல்) இரயில் நிலையம் சென்று அங்கிருந்து இரவு 11-30 மணிக்கு பரமக்குடிவந்து பொதுக்கூட்டம் நடத்தவேண்டியதாயிற்று.

பரமக்குடி:

தோழர்கள் இ. ல. ம. சவுந்தரபாண்டியன், தென்னரசு, மு. பாண்டியன் ஆகியோர் பொதுச்செயலாளரோடு சென்று பரமக்குடிப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அந்த நள்ளிரவிலும் பரமக்குடி வைகை ஆற்றுப்படுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்து கூட்டத்தைச் சிறப்பித்தது பாராட்டுதலுக்குரியதாகும்.

மாவட்டச் செயலாயர் இ. ல. ம. சவுந்திர பாண்டியன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். தோழர்கள் நாகலிங்கம் எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் பேசியபின் பொதுச் செயலாளர் அவர்கள் விரிவானதோர் உரை நிகழ்த்தினர். கூட்டம் இரவு இரண்டு மணிக்கு முடிவுற்றது.

மறுநாள் காலை 11 மணிக்கு பொதுச் செயலாளர் அவர்கள் பரமக்குடி கலைமுரசு நாடக மன்றத்தைத் துடங்கி வைத்தார் தோழர் முத்துராமலிங்கம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், எஸ்.எஸ். தென்னரசு இருவரும் 'கலையும் நாடும்' என்ற பொருள் பற்றிப் பேசினர்.

ஆ. தெக்கூர்:

17—7—57 மாலை 6 மணிக்கு, ஆ. வடக்கூரில் தி, மு. கழகக் கொடியை ஏற்றிவைத்துவிட்டு, 6-30 மணிக்கு, ஆ. தெக்கூர் தி. மு. கழகச் சார்பில் தோழர் கோயிலாப்பட்டி நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொண்டார். 'இன்றைய அரசியலில் நாம்' என்ற தலைப்பில் பொதுச்செயலாளர் அவர்கள் விரிவுரையாற்றினர். பகுத்தறிவுப் படிப்பகம், மாணவர் முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் சார்பில் பொதுச்செயலாளருக்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

திருப்புத்தூர்—தென்மாப்பட்டு:

அன்று இரவு 8 மணிக்கு, திருப்புத்தூர் — தென்மாப்பட்டு குறள் மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓர் மாபெரும் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்கள் கலந்துகொண்டார். இருபதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் குறள் விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினர். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், குன்றக்குடி அடிகளார் இருவரும் சிறப்புரை வழங்கினர்.

காளாப்பூர்:

இரவு 12 மணிக்கு, காளாப்பூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்களும், இ. ல. ம. சவுந்திரபாண்டியன், எஸ். எஸ். தென்னரசு, இராம. வெள்ளையன், கா. காத்தமுத்து ஆகியோரும் கலந்துகொண்டனர். தோழர் பி. சண்முகம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். தோழர் எஸ். எஸ். தென்னரசு, இதயமணி இருவரும் பேசியபின் பொதுச்செயலாளர் நல்லதோர் அரசியல் விளக்கம் தந்தார்.

காளாப்பூரோடு பொதுச்செயலாளர் நிகழ்ச்சி முடிவுற்றது. 18—7—57 காலை 10 மணிக்கு, பொதுச்செயலாளர் திருப்பத்தூரை விட்டு, திருச்சிக்குப் புறப்பட்டார்கள். தோழர்கள் சவுந்திரபாண்டியன், தென்னரசு, இராம. வெள்ளையன், காத்தமுத்து, 'தியாகி' பரமசிவம் முதலியோர் பொதுச்செயலாளருக்கு நன்றிகூறி அனுப்பிவைத்தார்கள்.

மொத்தத்தில் பொதுச்செயலாளரின் சுற்றுப்பயணம் மகத்தான வெற்றியைத் தந்தது. தேர்தலுக்குப் பிறகு, முகவை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் எழுச்சியை பொதுச்செயலாளர் பாராட்டினர்.

நிகழ்ச்சியில் இடம் பெற்ற ஊர்களிலெல்லாம் பொதுச்செயலாளர் அவர்களுக்கு ஏராளமான கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. (ந. கி.)

சேலம் மாவட்டத்தில் சவ்வரிசித் தொழில்

தயாரிப்பாளர்களுக்கு ஒரு குறிப்பு

'சவ்வரிசித் தொழிலுக்கான பாதுகாப்பு மேலும் 2 ஆண்டு காலத்துக்கு—அதாவது 1959 கடைசி வரையில் தொடர்ந்து அளிக்கப்பட்டு வர வேண்டும்' என்ற காப்பு வரிக் குழுவின் சிபாரிசை சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சவ்வரிசி உற்பத்தித் தொழில் நுட்பத்தை அபிவிருத்தி செய்வது, விற்பனைகளை விரிவாக்குவது, புள்ளி விவரங்களைச் சேகரிப்பது சம்பந்தமான சிபாரிசுகளையும் குழு செய்திருக்கிறது. இந்தச் சிபாரிசுகள், சவ்வரிசித் தொழில் துறையினர், சேலம் சவ்வரிசித் தயாரிப்பாளர்கள் சங்கம் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்தியாவில் சுமார் 135 கிறுவனங்கள் சவ்வரிசித் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கின்றன; இவைகளில் பெரும்பாலானவை சேலம் மாவட்டத்தில் இருக்கின்றன.

சாதாரணமாக மரவள்ளிக் கிழங்கை மாவாக அறைப்பதற்கு மின்சார மோட்டார்கள் பொருத்தப்பட்ட இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன' 'ஸ்டார்ச்' (மாவுச் சத்து) எடுப்பது, வடிகட்டுவது, இறுகவைப்பது, சவ்வரிசி உருண்டைகள் தயாரிப்பது ஆகிய வேலைகள் குடிசைகளில் கையாலேயே செய்யப்படுகின்றன.

இத்தொழிலின் ஆண்டு உற்பத்தி சக்தி 30,000 டன்னிலிருந்து 35,000 டன் வரை இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையான உற்பத்தி ஆண்டொன்றுக்கு 18,000 டன் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; நாட்டின் வருடாந்தரத் தேவை சுமார் 23,000 டன் இருக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பொதுவாக, உள்நாட்டுத் தயாரிப்புச் சரக்கு நல்ல தரமுள்ளதாகவே இருக்கிறது.

க. அன்பழகன் தெளிவுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஏறத்தாழ ரூ. 10,000-க்கு விற்பனை செய்யும் வியாபாரிகள் கூடச் சில்லறை வியாபாரிகள் என்ற தரத்தில் சேர்ந்திருப்பதால்—அவர்கள் பெரிய வியாபாரிகளிடமிருந்து பொருள்களை வாங்கி விற்பவர்கள் என்ற காரணத்தால் சில்லறை வியாபாரிகள் தரத்தில் சேர்ந்திருப்பதால்—அவர்களுக்குக் கிடைக்கும் இலாபத்திற்கு ஏற்ப அரசாங்கத்திற்கு விற்பனை வரியின் மூலம் வருமானம் அதிகரிப்பதில்லை. ஆனால் நடைமுறையில், அவர்கள் விற்பனை வரிவிகித உயர்வை தாங்கள் இலாபம் தேடுவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். விற்பனை வரிவிகிதம் உயர்ந்தால், அந்த வியாபாரிகளிடம் சாதாரண மக்மள் சாமான்கள் வாங்கும்போது, முன்பு 4 அணுவுக்கு வாங்கிவந்த பொருள்களுக்கு வரிவிகிதம் உயர்ந்தபிறகு $4\frac{1}{2}$ அணு கொடுக்கவேண்டியிருக்கிறது. அந்த வியாபாரிகளிடம் சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட அளவு வெல்லத்திற்கு 4 அணு கொடுக்க வேண்டியிருக்குமானால், விற்பனை வரிவிகிதம் உயர்த்தப்பட்டால் $4\frac{1}{2}$ அணு கொடுக்கவேண்டியிருக்கிறது.

"ஆகவே, விற்பனை வரியை எந்தக் காரணத்தைக்கொண்டு உயர்த்தினாலும், வியாபாரத்தில் சூது நடத்துபவர்கள் அந்த வரி உயர்வை தாங்கள் இலாபம் தேடுவதற்கு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்; அதன் காரணமாக, மக்களுக்கு அரசாங்கத்தைப்பற்றி இருக்கும் மனப்பான்மையும் அரசாங்கத்திற்குப் பாதகமாக மாறுகிறது.

"இப்போது விற்பனை வரிச் சட்டத்தில் வரிவிகிதம் சம்பந்தமாகச் செய்யப்படும் திருத்தம், சூது செய்யும் வியாபாரிகளுக்குத் தான் பயன்படும். இந்தத் திருத்தம் நல்லமுறையில் செய்யப்படும் திருத்தம் ஆகாது. கணக்கு போடுவதற்குச் கடினமாக இருக்கிறது என்பதற்காக 9/16 என்ற பின்னத்தைத் திருத்த வேண்டுமானால் அதற்கு நெருங்கிய பின்னமாகிய $\frac{1}{2}$ என்ற பின்னமாகத் திருத்திக்கொள்ளலாம். அப்படிச் செய்து, இந்த அரசாங்கம் நல்லதொரு திருத்தத்தை மேற்கொள்ளலாம். அதையே மக்கள் வரவேற்பர்.

விலை ஏற்றத்திற்கு இந்த வரி பொறுப்பல்ல; அரசாங்கம் வரி போட்டாலும், அவர்கள் கோடியாக பொறுப்பல்ல என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. நாம் உண்மையிலேயே அரசாங்கத்திடம் எதிர்பார்ப்பது சமுதாயத்தில் ஏற்படுகிற விளைவுகளுக்கான பொறுப்பை அரசாங்கம் ஓரளவிற்கேனும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது. சமுதாயத்தில் ஏற்படுகிற விளைவுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் ஒரு அரசாங்கத்திற்கு இருந்தால்தான் அது ஜனநாயக அரசாங்கம் என்ற பெயருக்குரிய பெருமையுடையது என்று ஒத்துக்கொள்ள முடியும். அரசாங்கம் அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தயங்குகிற நேரத்தில், எதிர்க்கட்சியினர் அதை எடுத்துச் சொல்லி வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆனால், 'உண்மையில் விலை உயர்வு இந்த வரியால் அல்ல' என்று தெரிவிக்கப்பட்டது.

"இன்றையத்தினம் 'நயா பைசா' முறைக்கு பழைய காசுகள் மாறிவிட்டதால், காலணவிலிருந்து பைசாவாக மாற்றும் போது 2 பைசா வசூலித்து விடுகிறார்கள்—என்று அமைச்சர் தெரிவித்தார்; நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்வேன்—'நயா பைசா' என்ற புதுக் காசுகள் இன்று மக்களிடையே புழக்கத்திற்கு வந்தும் கூட—அரையணு—ஓரணு என்பவை இன்னும் புழக்கத்தை விட்டுப் போகவில்லை. காலணுவும், அணுக்களும் 'நயா பைசா'வாக மாறுகிறகாரணத்தால், பொருள்களின் விலை முன் இருந்ததைவிட உயர்ந்து விடுகிறது. அணுக்களைக் கொடுத்துச் சாமான்கள் வாங்குகிறவர்கள், திரும்ப 'நயா பைசா'விற்குப் பதில் அணுக்களை வழங்கும்போது பொது மக்கள் திரும்பவும் ஏமாறுகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

"'நயா பைசா'வாகக் கையிலே கொடுப்பவர்கள் வேண்டுமானால், இத்தனை 'நயா பைசக்'கள் என்று கணக்குப் போட்டு அதைக் கொடுத்து வியாபாரிகளிடத்திலிருந்து ஏமாறாமல் இருக்கமுடியுமே தவிர, கிராமத்து மக்கள்—'நயா பைசா'வை இன்னும் கண்ணால் கூடக் கண்டு அறியாதவர்கள்—ஏமாறாமல் இருக்கமுடியாது. 'நயா பைசா'வை, நகரத்தில் உள்ளவர்களே இன்றையத் தினம் பயன்படுத்த அஞ்சுகிறார்கள்—ஒதுங்குகிறார்கள்.

"'நயா பைசா' மக்களிடையே வழங்காதபோது, காலணு, அரையணுவைப் பயன்படுத்தி சாமான்கள் வாங்க நேருமாதலால் வியாபாரிகளிடத்தில் மக்கள் சாதாரணமாக ஏமாறுவார்கள். பழைய காசுகள் நீங்காதவரை—அந்த காசுகள் அடியோடு மாறாதவரை, மறுபடியும் பொதுமக்கள் அந்த வியாபாரிகளிடத்தில் ஏமாறத்தான் செய்வார்கள், ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு இல்லாமல் பல ஏமாற்றங்கள் நேரிடுவதற்கே இதனால் இடம் ஏற்படுகிறது. மத்திய அரசாங்கம் 'நயா பைசா'வைப் புகுத்தி சட்டம் செய்துவிட்டார்கள்; அந்த வழிதானே நாமும் செல்லவேண்டும் என்ற வகையில், இந்தத் திருத்தம் கொண்டுவருவது உண்மையிலேயே வரவேற்கக்கூடியதாக இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியது என் கடமையாகும்."

சென்னை--புரசை அறிவு வளர்ச்சி மன்ற 6-வது ஆண்டுவிழா

க. அன்பழகன், எம். பி. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டனர்

சென்னை, ஆக. 1—

31—7—57-ல், மேற்படி மன்றத்தின் 6-வது ஆண்டுவிழா, புரசையில், தோழர் நடராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ., எம்.எல்.ஏ., எம். பி. சுப்பிரமணியம் பி.ஏ., எம்.எல்.ஏ., கரிகாலன், வேணுகோபால் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு அறிவுரையாற்றினர்.

கூட்டத் துவக்கத்தில் இயக்கப் பண் இசைக்கப்பட்டு பொதுமக்களுக்கு அறிவு செறிந்த கருத்துக்கள் வழங்கப்பட்டன.

தோழர் வேணுகோபால் அவர்கள் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல்—பொருளாதார—சமுதாயத் திட்டங்களை விளக்கிப் பேசினர்.

அடுத்துப் பேசிய தோழர் கரிகாலன் பண்டைத் தமிழர் சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியைச் சுட்டிக்காட்டி, இடையில் அவ்வளர்ச்சிக்குத் தடைகள் போடப்பட்டதின் உண்மைகளைக் கூறி, திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் மக்களிடையே அறிவு வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறது என்று விளக்கினர்.

பின்னர், தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்களும், தோழர் க. அன்பழகன் அவர்களும் இன்றைய அரசியல் நிலைகுறித்து விரிவுரையாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூறலுடன் விழா முடிவடைந்தது.

எண்ணற்ற பெண்களை அடிமைப்படுத்தியிருப்பதாக!

ஐதராபாத் நிசாம் மீது குற்றச்சாட்டு

உத்தரவு பிறப்பிப்பதை ஒத்திவைத்தார் நீதிபதி

ஐதராபாத், ஆக. 1—

ஐதராபாத் நிசாமின் அரண்மனையில் எண்ணற்ற ஆண்களும் பெண்களும் அடிமைகளாக வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், அவர்களை விடுவிக்கவேண்டும் என்றும் பி. ஜி. கேஸ்கர் என்ற வழக்கறிஞர் ஒருவர் மாவட்ட நீதிபதிக்கு மனுச் செய்திருக்கிறார்.

முன்பு 1955-ம் ஆண்டில் இதேபோல ஒரு மனு தரப்பட்டிருந்தது. அதன்படி மாவட்ட நீதிபதி, போலீஸ் கமிஷனரை அனுப்பி விசாரணை நடத்தச் சொன்னார். ஆனால் நிசாம், அப்போது மாநிலத்தின் இராசப்பிரமுகராக இருந்தமையால், அவர் அத்தகு விசாரணைக்கு உட்படுத்தப்பட முடியாது என்று உயர் நீதிமன்றத் தீர்ப்பு மூலம் கூறப்பட்டது. இந்தத் தீர்ப்புக்கு எதிரான அப்பீல் வழக்கு ஒன்று தலைமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்குக் காத்திருக்கிறது.

இதற்கிடையில், 1956 நவம்பர் முதல் நிசாம், இராசப்பிரமுகர் என்ற அந்தஸ்தினை இழந்துவிட்டமையால், அவர் ஒரு சாதாரணக் குடிமகன்தான் என்றும், எனவே அவர் அரண்மனையில் அடிமைகளாக்கப்பட்டிருக்கும் சுமார் 300 பெண்கள், 100 ஆண்கள், எண்ணற்ற இளஞ்சிறுர்கள் அனைவரையும் மீட்கவேண்டும் என்று வழக்கறிஞர் தமது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுபற்றி முடிவு அறிவிப்பதை நீதிபதி ஒத்திப்போட்டிருக்கிறார்.

'அடிமைகளாக்கப்பட்டிருக்கும் வயது வந்த ஆண் பெண்களை மீட்பதுதான் தமது நோக்கம் என்றும், நிசாமைக் கைது செய்ய வேண்டுமென்பதல்ல' என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும், பல மதத்தையும் சார்ந்தவர்களாயிருந்த அந்த ஆண்களும், பெண்களும் இப்போது முகம்மதியர்களாக்கப்பட்டுவிட்டனர் என்றும் மனு கூறுகிறது.

சேலத்தில் ஆர்ப்பாட்டம்

சேலம், ஆக. 1—

சேலத்தில் சோஷலிஸ்டு கட்சியினர் 5 பேர் இன்று, மாவட்ட அதிகாரி அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்கள், அலுவலக காம்பவுண்டிற்குள் சென்று, வாயிலின் இருபுறமும் நின்றுகொண்டு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தபோது, போலீசார் அவர்களை லாரியில் ஏற்றிச்சென்றனர்; மாலையில் அவர்களை விடுதலை செய்தனர்.

2-ம் நாள் மறியல்

2-ந் தேதியன்று 10 சோஷலிஸ்டு கட்சித் தொண்டர்கள் கலெக்டர் காரியாலயத்தின் இரண்டு வாயில்களிலும் இரண்டு பகுதியாக நின்றுகொண்டு மறியல் செய்தார்கள். அந்த 10 பேர்களையும் போலீசார் 'போலீஸ் வேனில்' அழைத்துச் சென்றனர். (ந. நி.)

சென்னை, ஆக. 2—

கூட்டுறவு பால் விநியோக சங்கங்களாலும், மற்றவர்களாலும் விற்கப்படும் பாலுக்கு விற்பனையில் ஒரு சதவிகிதம் விற்பனை வரியாகக் குறைத்து அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது; 1—8—57 முதல் இது அமுலுக்கு வந்துள்ளது.

தேர்தல் வழக்குகள்

சென்னை, ஆக. 2—

சென்னை சட்டசபைக்கு வண்ணையம்பதி தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. எம். மாயாண்டி நாடாரின் தேர்தல் செல்லாது என்று கழக அபேட்சகர் தோழர் என். சிவரத்தினம் செய்துகொண்ட மனு, வரும் செப்டம்பர் திங்கள் மூன்றும் நாள் விசாரணைக்கு வருகிறது. வழக்குக்கான விவரங்கள் வரும் ஆக. 6-ம் நாள் ஆராயப்படும் என்று தெரியவருகிறது.

சென்னை-எழும்பூர் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு எதிராக திரு. எம். இராதாகிருட்டிணபிள்ளை செய்துகொண்டுள்ள மனுவைப்பற்றிய தகுதி அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளது. மனு விசாரணை ஆக. 14-ம் நாள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

இந்த இரு தேர்தல் மனுக்களையும் விசாரித்துத் தீர்ப்புக் கூற நியமிக்கப்பட்டுள்ள திரு. ஜி. கே. தாமோதர ராவ் வழக்குகளை விசாரிப்பார்.

தேவதாஸ் காந்தி

மறைவு

காந்தியாரின் இளைய மகனும் ஆச்சாரியாரின் மருமகனும், 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழின் நிர்வாக ஆசிரியருமான தேவதாஸ் காந்தி அவர்கள் தமது 56-வது வயதில் இன்று காலை 3 மணி அளவில் மாரடைப்பின் காரணமாக பம்பாயில் இயற்கை எய்தினார்.

டெல்லிக்குச் சென்றுகொண்டிருந்த அவர், கடந்த ஒருவார காலமாய் அலுவல் காரணமாகப் பம்பாயில் தங்கியிருந்தார். நேற்று மாலை அவருக்கு இருதய நோய் கண்டது; டாக்டர்கள் கவனித்தும் பலன் இல்லாது போயிற்று.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

காஞ்சீபுரம் தொகுதி பொதுநல மாநாடு

★

காஞ்சீபுரம் தொகுதி முன்னேற்றம் குறித்து வழிவகைகாண, மேற்படி பொதுநலமாநாடு

5--8--57 மாலை 5-மணிக்கு

தண்டலம் கிராமத்தில் நடைபெறும்

★

மாநில முதலமைச்சர் **காமராசர்** தலைமை வகிப்பார்

சி. என். அண்ணுதுரை
வரவேற்பாளர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

திமிரி:
தேரடி மைதானம்
5—8—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ஆர். ஜார்ஜ்
பேசுபவர்:
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.

★

மேலமாத்தூர்:
(பெரம்பலூர் வட்டம்)
5—8—57 மாலை 4½ மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: பி. ஆர். இரத்தினசாமி
திறப்பாளர்:
சி. பி. சிற்றரசு
கொடி உயர்த்துவபர்:
அன்பில் தர்மலிங்கம்
பேசுவோர்:
எம். வடிவேலு
ஏம். பெரியசாமி
ஏ. மருதமுத்து
ஏ. அரசு

★

பள்ளியாடி:
சர்க்கஸ் திடலில்
5—8—57 மாலை 5 மணிக்கு
தலைவர்:
பி. சாமுவேல் பி.ஏ., பி.எல்.
பேசுவோர்:
கி. மனோகரன்
பி. எம். கண்ணு

சென்னை மாநில தபால்—தந்தி நான்காந்தர சிப்பந்திகள் சங்க

சிறப்புக் கூட்டம்

4—8—57 காலை 10-மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில், மேற்படி சங்க நிதிக்காக ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும்; மேற்படி சங்கத்தின் தலைவர் தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ., அவர்கள் தலைமை வகிப்பார். தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., தோழர்கள் கண்ணதாசன், கே. இராமமூர்த்தி, எச். ஆர். எம். டி. ராம்ஜி ஆகியோர் மேற்படி சிப்பந்திகளின் வேலைநிறுத்தம் பற்றிப் பேசுவர்.

நன்கொடை: ரூ. 1; அணு 8.

தமிழ் வளர்ச்சி மன்ற இரவு பள்ளி துவக்கவிழா

5—8—57 மாலை 6 மணிக்கு, சென்னை-சிந்தாதிரிப்பேட்டை மங்கபதி நாய்க்கன் தெருவில் மேற்படி விழா நடைபெறும். தோழர் தி. மணிவண்ணன் தலைமை வகிப்பார்; தோழர்கள் க. அன்பழகன் எம்.எல்.ஏ., கண்ணதாசன், அ. பொ. அரசு மற்றும் பலர் பேசுவர்.

திருவள்ளுவர் மன்றத் துவக்கவிழா

4—8—57 மாலை 6 மணிக்கு சென்னை-அடையாறு அடுத்த திருவான்மியூர் சிங்காரவேலர் திடலில் மேற்படி மன்றத் துவக்க விழா நடைபெறும்; தோழர் தீ. இ. பாலசுந்தரம் தலைமை வகிப்பார்; நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி மன்றத்தைத் துவக்கிவைப்பார்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., என். சீவரத்தினம், ஆகியோர் பேசுவர்; டேப்-இராதாமாணிக்கம் இன்னிசை வழங்குவார். அன்று பகல் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்படும்.

நீத்தார் நினைவு நாள்

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர் தி. ந. சம்பந்தம் அவர்களின் தந்தையார் கடந்த 24—7—57-ல் இயற்கையெய்தியதை முன்னிட்டு 4—8—57 அன்று காலை 9-மணிக்கு நீத்தார் நினைவு நாள் குன்றத்தூர் மேட்டுத்தெருவிலிருக்கும், தி.ந. சம்பந்தம் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். சைதை மாணிக்கனர் தலைமை வகிப்பார்; தோழர்கள் என். வி. நடராசன், சி. வி. எம். அண்ணமலை, ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் கலந்து கொள்வர்.

புதுடில்லி, ஆக. 2—

மோட்டார் போக்குவரத்து ஊழியர் சட்ட நகலை இறுதியாக வகுப்பதற்காக முத்தரப்பு நிபுணர் குழுவொன்றை இந்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

நேரில் ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதற்காக அமைந்த தனிப்பெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஆகஸ்டில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

ஆகஸ்ட் 9-ந்தேதி ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி: 8-8--57

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாக கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.